# 8 தரம்

# சுகாதாரமும் உடற்கல்வியும்

## தலைப்பு 7




## 7 வழிவிளையாட்டுக்களில் ஈடுபட்டு மகிழ்வோம்


வ.சந்திரகேசன்
ப/மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை) பசறை

# தலைப்பு 7 வழிவிளையாட்டுக்களில் ஈடுபட்டு மகிழ்வோம்



## உப தலைப்பு 7.1 . வழிவிளையாட்டுக்களை இனங்காண்போம்

விளையாட்டு வகைகள்

- பெருவிளையாட்டு
- சிறுவிளையாட்டு
- மெய்வல்லுனர் விளையாட்டு
- விநோத விளையாட்டு

வழிவிளையாட்டு என்பது பிரதான விளையாட்க்களின் திறன்களை விருத்தி செய்வற்காக நிருமாணிக்கப்படும் விளையாட்டுச் செயற்பாடுகள் வழிவிளையாட்டுக்கள் எப்படும்





# வழி விளையாட்டுக்களின் தேவைகள்

பிரதான விளையாட்டுக்களின் திறன்களைத் திருப்தியாகவும் களைப்பின்றியும் எளிதாக கற்றுக்கொள்ள

அத்திறன்களை சரியான நுட்பமுறைகளிற்கமையப் கற்பதன்மூலம் விளையாட்டில் நிபுணத்துவமடையவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது

உடற்றகைமைகளை பெற்றுக்கொள்ளலாம்

உள சமூக தகைமைகள் கிடைக்கின்றன

# வழிவிளையாட்டுக்களின் விசேட இயல்புகள்

- விதி முறைகள் எளிமையானவை.
- உபகரணங்களின்றியும் உபகரணங்களுடனும் விளையாடலாம்.
- கிடைக்கும் இடவசதிக்கேற்ப செயற்பாடுகளை நிர்மாணிக்கலாம்.
- மகிழ்ச்சியோடு போட்டி அனுபவமும் கிடைக்கின்றது.
- விரும்பியவாறு விளையாட்டுச் செயற்பாடுகளை நிர்மாணிக்க முடியும்.

# வழிவிளையாட்டுக்களில் ஈடுபடுவதன்மூலம் உடல் உள சமூகத் தகைமைகள் விருத்தியாகும் முறைகள்

## உடற்றகைமை

- களைப்பை தாங்கும் ஆற்றல் கிடைக்கும்
- விளையாட்டு நுட்பமுறை தொர்பான பயிற்சி கிடைக்கும்
- அன்றாட செயற்பாடுகளுக்கு தேவையான தகைமை விருத்தியாகும்

## உளத்தகைமை

- இரசனையும் மகிழ்ச்சியும் கிடைக்கும்
- விளையாட்டில் ஆர்வம்
- விளையாட்டுச் செயற்பாடுகளை நிருமாணிக்க தூண்டப்படுதல்
- வெற்றி தோல்விகளை தாங்கிக்கொள்ளும் ஆற்றல் விருத்தியாகும்
- சுய ஒழுக்கம் ஏற்படும்

## சமூகத்தகைமை

- குழு உணர்வு விருத்தியாதல்
- பொறுப்பேற்கும் ஆற்றல் கிடைக்கும்
- ஆளிடைத் தொடர்புகள் விருத்தியாதல்
- விதிமுறைகளுக்கு இணங்கி நடக்கப் பயிலுதல்
- பிறர் பாதுகாப்பிலும் அக்கறை கொள்ளுதல்
- தலைமைத்துப் பண்புகள் விருத்தியாதால்
- பிறர் கருத்துக்களுக்கு செவிசாய்த்தல்

# வழி விளையாட்டின் வகைகள்

வழி விளையாட்டு

1. உபகரணங்களின்றிய வழி விளையாட்டுக்கள்
   - திரும்பி ஓடதல்

2. உபகரணங்களுடனான வழி விளையாட்டுக்கள்
   - இலக்குக்கு பணித்தல்
   - பந்தைக் கடந்து ஓடுவோம்
   - கிக் போல்

| வழி விளையாட்டு | பிரதான விளையாட்டு | வளர்த்து கொள்ளும் திறன்கள் | தேவையான உபகரணங்கள் | விதிமுறைகள் |
|---|---|---|---|---|
| திரும்பி ஓடதல் | மெய்வல்லுனர் விளையாட்டு | ஓட்ட புறப்படும் வேகத்தை அதிகர்த்தல் |  | ■ ஓடிவரும் மாணவனைத் திரும்பி பார்க்க முடியாது<br>■ முதுகில் தட்டிய பின்னரே ஓட ஆரம்பிக்க வேண்டும்<br>■ எல்லை கோட்டிற்கு வெளியிலிருந்தே ஓட ஆரம்பிக் வேண்டும் |
| இலக்குக்குப் பணித்தல் | வொலிபோல் | பந்து பணிக்கும் திறன் |  | ■ சரியான நுட்பமுறைக்கமைய பணித்தல் மேற்க்கொள்ளப்படுதல் வேண்டும்<br>■ பணிக்கும் போது எல்லைக்கோட்டை மிதிக்கக் கூடாது |

| வழி விளையாட்டு | பிரதான விளையாட்டு | வளர்த்து கொள்ளும் திறன்கள் | தேவையான உபகரணங்கள் | விதிமுறைகள் |
|---|---|---|---|---|
| பந்தை கடந்து ஓடுவோம் | வலைபந்து | மார்புக்கு நேராக மாற்றல்<br><br>குறுங்கோல் மாற்றுதல் |  | ■ பந்து மாற்றுதல் குறுங்கோல் மாற்றுதல் என்பன நுட்பமுறைக்கமைய இடம் பெறுதல் வேண்டும்<br>■ வட்டத்தில் இருப்போர் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தலாகாது<br>■ ஒவ்வொறுவரும் பந்து விடுபடாது மாற்ற வேண்டும் |
| கிக் போல் | காற்பந்து | பாதங்களில் பந்து கொண்டுச் செல்லும் திறன் |  | ■ அனைவரும் கோட்டுக்குப் பின்னால் நின்று ஆரம்பிக்க வேண்டும்<br>■ பாதத்தின் உட்பகுதியாலும் வெளிப்பகுதியாலும் உதைக்க வேண்டும்<br>■ எல்லாச் சோடிகளும் கூம்பைச் சுற்றி வர வேண்டும் |